சார்பு நீதிமன்றம், மேட்டுப்பாளையம்

முன்னிலை : திரு.கே. பழனிவேல், பி.எல்.,

சார்பு நீதிபதி, மேட்டுப்பாளையம்

2026 ம் ஆண்டு மார்ச்சு திங்கள் 13 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

(திருவள்ளுவராண்டு 2056 விசுவாவசு வருடம் மாசித் திங்கள் 29 ஆம் நாள்)

<u>அசல் வழக்குஎண்.75/2024</u>

<u>CNR.No. TNCB190004792025</u>

1. ரங்கம்மாள்
2. கே.மணிவேல்
3. எம். மல்லிகா
4. எம். சாவித்திரி
5. எம். சாந்தி
6. எம். சித்ரா
7. நஞ்சம்மாள்
8. வள்ளியம்மாள்
9. கே. காளியப்பன் .... வாதிகள்

-இடையே-

1. வி.லதா
2. ஆர்.கதியம்மாள்
3. ஆர்.பாளியம்மாள்
4. வி. காளியம்மாள்
5. எம்.ராமியம்மாள்
6. சி. மருதையம்மாள்
7. டி.கமலா
8. கே. லட்சுமி
9. என்.பாலாமணி

10.எம்.கீதா

11.சி.செல்லியம்மாள்

12. எம். லட்சுமி

13. ஆர்.நாஞ்சியம்மாள்

14. சி. ரங்கம்மாள்

15. கே. ரங்கி

16. ஆர்.பாலாமணி

17. ஆர். மாருதி

18. என். பத்ரி

19. ஆர். துளசி

20. வட்டாட்சியர் அவர்கள்

மேட்டுப்பாளையம்

21. மாவட்ட ஆட்சியர் அவர்கள்,

கோயமுத்தூர் .... பிரதிவாதிகள்

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்தபோது வாதிகள் தரப்பில் வழக்குரைஞர் திரு. ஜி,ஐ.என். சிற்பி, அவர்கள் முன்னிலையாகியும், 1 முதல் 19 பிரதிவாதிகள் தரப்பில் திருமதி.சி.லட்சுமிகாந்தா, அவர்கள் முன்னிலையாகி எதிருரை தாக்கல் செய்யாததால் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும் 20 மற்றும் 21 பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்குரைஞர் திரு. எம். சிவசுரேஷ்,அவர்கள் முன்னிலையாகி எதிருரை தாக்கல் செய்யாததாலும் ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும் சாட்சியங்களை பரிசீலனை செய்தும் வாதிகள் தரப்பு வாதத்தைக் கேட்டும் இறுதியாக இன்று இந்நீதி மன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

01. இவ்வழக்கானது 1 முதல் 9 வாதிகள் வழக்கு சொத்திற்கு உரிமை யானவர்கள் என விளம்புகை பரிகாரம் கோரியும், 1 முதல் 19 பிரதிவாதிகள் வழக்கு B-அயிட்ட சொத்தில் சட்டத்திற்கு புறம்பாக கட்டியுள்ள கட்டிடங்களை இடித்து

அப்புறப்படுத்தி காலி இடமாக வாதிகளுக்கு கொடுக்க வேண்டும் என்று செயலுருத்து கட்டளை பரிகாரம் பிறப்பிக்கக்கோரியும் 1 முதல் 19 பிரதிவாதிகள் வாதிகளின் சொத்தின் சுவாதீனத்திற்கு எந்தவித இடையூறும் செய்யக்கூடாது என நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் பிறப்பிக்க கோரியும் மேலும் வாதிகளுக்கு பிரதிவாதிகள் வழக்கின் செலவுத் தொகையுடன் தீர்ப்பளிக்குமாறும் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது .

**<u>02. வழக்குரையின் சுருக்கம்</u>** :

இத்தாவாவானது வாதிகள் பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் கோரியும், நிரந்தர தடையுறுத்து கட்டளை பரிகாரம் கோரியும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். தாவா சொத்து விபரத்தில் ஏ-அயிட்ட சொத்தினை கடந்த 13.06.1978 ல் வாதியின் தகப்பனார் வி . கவுண்டன் மேட்டுப்பாளையம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணம் 1206/1978 எண்ணாக சுயார்ஜிதமாக கிரையம் பெற்றுள்ளார். அந்த சொத்தில் வாதியின் தகப்பனார் கிரையம் பெற்ற நாளிலிருந்து 16.05.1989 ம் ஆண்டு காலமாகும் வரை ஆண்டு அனுபவித்து வந்தார் . வாதிகளின் தாயார் 06.04.2010 ல் காலமாகிவிட்டதை தொடர்ந்து மேற்படி வழக்கு சொத்திற்கு 1 முதல் 9 வாதிகள் மட்டுமே வாரிசுகள் ஆவார்கள்.

மேலும் 1 முதல் 9 வாதிகளும் ரங்கன் என்கிற வாதியின் இளைய சகோதரரும் சொத்தின் சுவாதீனத்திலிருந்து அனுபவித்து வந்த நிலையில் வாதியின் சகோதரரான ரங்கன் 31.07.2017 ல் அவரது ஒரே மகளாகிய 8 ம் வாதியை வாரிசாக விட்டுவிட்டு காலமாகிவிட்டார் . ரங்கனுடைய மனைவி முருங்கி ரங்கனுக்கு முன்பே காலமாகிவிட்டார் . 31.07.2004 ல் வாதியின் தாயாரின் பெயிரல் பட்டா எண்.1051 வழங்கப்பட்டது. மேலும் வாதியின் மூத்த சகோதரர் கே . மணிவேல் கடந்த 26.11.2023 ல் வீட்டை விட்டு காணாமல் போய்விட்டார் . பல இடங்களில் தேடியும் மணிவேலை கண்டுபிடிக்க முடியவில்லை. மேலும் வாதிகளில் 3 முதல் 6 நபர்கள் மணிவேலின் வாரிசுதாரர்கள் ஆவார்கள்.

மேலும் 1 முதல் 19 பிரதிவாதிகள் அனைவரும் குழியூர் கிராமத்தில்

வசிப்பவர்கள். சொத்து விபரத்தில் B அயிட்ட சொத்தில் அவர்களுக்கு தவறுதலாக வழங்கப்பட்ட பட்டாவினை பயன்படுத்தி வாதிகள் ஊரில் இல்லாத சமயத்தில் நான்கு பக்கங்களிலும் வீடு கட்ட குழி தோண்டியுள்ளார்கள் .அவ்வாறு குழி தோண்டியதை பார்த்த அக்கம் பக்கத்தினர் வாதிகளுக்கு தகவல் கொடுத்ததன்பேரில் வாதிகள் அங்கு சென்று பிரதிவாதிகளிடம் எங்களுக்கு உரிமையான சொத்தில் சட்டத்திற்கும் நியாயத்திற்கும் புறம்பாக வீடு கட்ட குழி தோண்டுவதை நிறுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளார்கள். அதன்படி பிரதிவாதிகள் குழி தோண்டுவதை நிறுத்தி விட்டார்கள். இந்நிலையில் வாதிகளின் சுவாதீனத்திலும் வருவாய் ஆவணங்கள் உள்ள நிலையில் வாதிகளுக்கு தெரியாமல் வழக்கு சொத்தை 20, 21 பிரதிவாதிகள் 1 முதல் 19 பிரதிவாதிகளுக்கு சட்டத்திற்கும் நியாயத்திற்கும் புறம்பாக பட்டா வழங்கி உள்ளார்கள்.

மேலும் வாதிகள் பிரதிவாதிகளிடம் சட்டத்திற்கு புறம்பாக வாங்கிய பட்டாவை காண்பிக்கும்படி கேட்டதற்கு பிரதிவாதிகள் காண்பிக்க மறுத்து விட்டார்கள் . இந்த சூழ்நிலையில் சட்டத்திற்கு புறம்பாக வழங்கப்பட்ட பட்டாவினை ரத்து செய்ய வாதிகள் நடவடிக்கை எடுத்து வந்த நிலையில் மீண்டும் 1 முதல் 19 பிரதிவாதிகள் வாதிகளின் சொத்தில் அத்துமீறி வீடுகட்டும் பணியினை துவங்கி உள்ளார்கள் . அதனால் வாதிகள் வேறு வழியின்றி காரமடை காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார்கள். புகாரின்பேரில் காவல் நிலைய அதிகாரிகள் உரிமையியல் பிரச்சினை என்பதால் நீதிமன்றத்திற்கு செல்லுமாறு அறிவுறுத்தி உள்ளார்கள் . இதனால் வாதிகள் மிகுந்த மன உளைச்சலுக்கும் கஷ்ட நஷ்டங்களுக்கும் உட்பட்டு வருவதால் வாதிகள் கோரிய பரிகாரத்தை வாதிகளுக்கு வழங்க கோரி வாதிகளால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

பிரதிவாதிகளை 08.07.2025 ம் தேதியில் அழைத்தும் இந்நீதிமன்றத்தில் ஆஜராகாததால் தோன்றாத்தரப்பினராக கருதப்பட்டுள்ளார்கள்.

வாதிகள் தரப்பில் வாதி வா .சா. 1 ஆக விசாரிக்கப்பட்டும் சான்றாவணங்கள் வா.சா. ஆ 1 முதல் வா.சா. ஆ .21 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

03. தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை என்னவென்றால் இந்த வழக்கு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

04. தீர்வு:

வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதிகள் தரப்பு சாட்சிய சான்றாவணங்களை அனுசரித்து வாதிகளின் வழக்கை அனுமதிக்கும்படி வாதுரை செய்தார்.

05. வாதிகள் தனது வழக்கை நிரூபிக்கும் வகையில் வாதி வா .சா. 1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். வா.சா.1.ன் சாட்சிய சங்கதி என்னவென்றால் வாதிகள் பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் கோரியும் , நிரந்தர தடையுறுத்து கட்டளை பரிகாரம் கோரியும் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும் வழக்கு சொத்தில் வாதியின் தகப்பனார் கிரையம் பெற்ற நாளிலிருந்து 16.05.1989 ம் ஆண்டு காலமாகும் வரை ஆண்டு அனுபவித்து வந்ததாகவும் வாதிகளின் தாயார் 06.04.2010 ல் காலமாகிவிட்டதை தொடர்ந்து மேற்படி வழக்கு சொத்திற்கு 1 முதல் 9 வாதிகள் மட்டுமே வாரிசுகள் என்று சாட்சியம் அளித்துள்ளார்.

மேலும் 1 முதல் 19 பிரதிவாதிகள் அனைவரும் குழியூர் கிராமத்தில் வசித்து வந்ததாகவும் சொத்து விபரத்தில் B அயிட்ட சொத்தில் அவர்களுக்கு தவறுதலாக வழங்கப்பட்ட பட்டாவினை பயன்படுத்தி வாதிகள் ஊரில் இல்லாத சமயத்தில் நான்கு பக்கங்களிலும் வீடு கட்ட குழி தோண்டியுள்ளதாகவும் அவ்வாறு குழி தோண்டியதை பார்த்த அக்கம் பக்கத்தினர் வாதிகளுக்கு தகவல் கொடுத்ததன்பேரில் வாதிகள் அங்கு சென்று பிரதிவாதிகளிடம் எங்களுக்கு உரிமையான சொத்தில் சட்டத்திற்கும் நியாயத்திற்கும் புறம்பாக வீடு கட்ட குழி தோண்டுவதை நிறுத்துமாறு கேட்டுக்கொண்டுள்ளதாகவும் அதன்படி பிரதிவாதிகள் குழி தோண்டுவதை நிறுத்தி விட்டதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

இந்நிலையில் வாதிகளின் சுவாதீனத்திலும் வருவாய் ஆவணங்கள் உள்ள நிலையில் வாதிகளுக்கு தெரியாமல் வழக்கு சொத்தை 20, 21 பிரதிவாதிகள் 1 முதல்

19 பிரதிவாதிகளுக்கு சட்டத்திற்கும் நியாயத்திற்கும் புறம்பாக பட்டா வழங்கி உள்ளதாகவும் வாதிகள் பிரதிவாதிகளிடம் சட்டத்திற்கு புறம்பாக வாங்கிய பட்டாவை காண்பிக்கும்படி கேட்டதற்கு பிரதிவாதிகள் காண்பிக்க மறுத்து விட்டதாகவும் இந்த சூழ்நிலையில் சட்டத்திற்கு புறம்பாக வழங்கப்பட்ட பட்டாவினை ரத்து செய்ய வாதிகள் நடவடிக்கை எடுத்து வந்த நிலையில் மீண்டும் 1 முதல் 19 பிரதிவாதிகள் வாதிகளின் சொத்தில் அத்துமீறி வீடுகட்டும் பணியினை துவங்கி உள்ளதாகவும் அதனால் வாதிகள் வேறு வழியின்றி காரமடை காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளதாகவும் மேலும் பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்ய நிறைய கால அவகாசங்கள் கொடுக்கப்பட்டும் பிரதிவாதிகள் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யாததாலும் பிரதிவாதிகள் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ளார்கள் ஆகவே வாதிகள் கோரிய பரிகாரத்தை வாதிகளுக்கு வழங்க கோரி வாதிகளால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது

மேற்படி வா.சா.1ன் சாட்சியமும் அதனை உறுதிப்படுத்தும் விதமாக வா.சா.ஆ 1 முதல் ம.சா.ஆ.21 ஆவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ள நிலையில் பிரதிவாதிகள் இந்நீதிமன்றத்தில் ஆஜராகி தன் தரப்பு ஆட்சேபனையை தெரிவிக்கவில்லை என்பதால் வழக்குரை சங்கதிகளிலிருந்து பிரதிவாதிகள் உட்கிடையாக ஒப்புக்கொண்டுள்ளார் என்பது மட்டுமில்லாமல் வாதிகள் தன் தரப்பு வழக்கை சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபித்துள்ளார் என்றும் இந்நீதிமன்றம் முடிவிற்கு வந்து வாதிகளின் வழக்கை அனுமதிக்கலாம் என்றே இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

06. முடிவாக,

1. வாதிகளின் வழக்கு அனுமதிக்கப்பட்டு 1,2,7 முதல் 9 வாதிகள்தான் தாவா சொத்தின் உரிமையாளர் என விளம்புகை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

2. மேலும் 1 முதல் 19 பிரதிவாதிகள் வழக்கு B அயிட்ட சொத்தில் சட்டத்திற்கு புறம்பாக கட்டியுள்ள கட்டிடங்களை இடித்து

அப்புறப்படுத்தி காலி இடமாக வாதிகளுக்கு கொடுக்க வேண்டும் என்று செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

3. வாதிகளுக்கு சொந்தமான வாதியின் அனுபவ சுவாதீனத்தில் உள்ள தாவா சொத்தினை பிரதிவாதிகளோ , அவரது ஆட்களோ , முகவர்களோ அல்லது அவரை சார்ந்தவர்களோ எந்த விதத்திலும் இடையூறு செய்யக் கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது.

4. வாதிகளுக்கு பிரதிவாதிகள் செலவுத்தொகையுடன் கொடுக்கவேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு 2026 ஆம் ஆண்டு மார்ச்சு திங்கள் 13 ஆம் நாள் என்னால் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

Sd/-K.Palanivel,

சார்பு நீதிபதி,
மேட்டுப்பாளையம்,

<u>வாதி தரப்பு சான்றாவணங்கள்</u>

| தேதி | ஆவண விபரம் | ஆவணத்தின் தன்மை | ஆவண வரிசை |
|---|---|---|---|
| 13.07.1978 | கவுண்டன் அவர்களுக்கு சோச்சி எழுதிக் கொடுத்த கிரைய பத்திரம் | அசல் | வா.சா.ஆ.1 |
| 26.10.1990 | கவுண்டன் அவர்களின் இறப்பு சான்றிதழ் | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட | வா.சா.ஆ.2 |

| | | | |
|---|---|---|---|
| | | நகல் | |
| 13.05.2024 | செல்லியம்மாள் பெயரில் உள்ள பட்டா எண்.1501 கொண்ட சிட்டா | பதிவிறக்க நகல் | வா.சா.ஆ.3 |
| 26.06.2024 | செல்லியம்மாள் அவர்களின் இறப்பு சான்றிதழ் | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் | வா.சா.ஆ.4 |
| 29.06.2024 | கவுண்டன் அவர்களின் வாரிசு சான்றிதழ் | பதிவிறக்க நகல் | வா.சா.ஆ.5 |
| 04.08.2017 | ரங்கன் அவர்களின் இறப்பு சான்றிதழ் | அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்ட நகல் | வா.சா.ஆ.6 |
| 1979 – 2024 | வழக்கு சொத்திற்கு உண்டான நில வரி இரசீதுகள் | அசல் | வா.சா.ஆ.7 |
| 18.05.2024 | சொத்தின் வரைபடம் | பதிவிறக்க நகல் | வா.சா.ஆ.8 |
| 19.06.2024 | காரமடை காவல் நிலையத்தில் அளிக்கப் பட்ட புகார் | அலுவலக நகல் | வா.சா.ஆ..9 |
| 14.05.2024 | சொத்தின் வில்லங்கச் சான்றிதழ் | பதிவிறக்க நகல் | வா.சா.ஆ..10 |
| 15.10.2013 | 1 ஆம் வாதியின் ஆதார் அடையாள அட்டை | நகல் | வா.சா.ஆ..11 |
| 20.11.2013 | 2 ஆம் வாதியின் ஆதார் அடையாள அட்டை | நகல் | வா.சா.ஆ.12 |
| 20.11.2013 | 3 ஆம் வாதியின் ஆதார் அடையாள அட்டை | நகல் | வா.சா.ஆ.13 |
| 22.11.2013 | 4 ஆம் வாதியின் ஆதார் அடையாள அட்டை | நகல் | வா.சா.ஆ.14 |
| 22.11.2013 | 5 ஆம் வாதியின் ஆதார் அடையாள அட்டை | நகல் | வா.சா.ஆ.15 |
| 22.11.2013 | 6 ஆம் வாதியின் ஆதார் அடையாள அட்டை | நகல் | வா.சா.ஆ.16 |

| | | | |
|---|---|---|---|
| 23.05.2019 | 7 ஆம் வாதியின் ஆதார் அடையாள அட்டை | நகல் | வா.சா.ஆ.17 |
| 23.05.2019 | 8 ஆம் வாதியின் ஆதார் அடையாள அட்டை | நகல் | வா.சா.ஆ.18 |
| 12.06.2019 | 9 ஆம் வாதியின் ஆதார் அடையாள அட்டை | நகல் | வா.சா.ஆ.19 |
| 16.05.2024 & 19.06.2024 | சொத்து வழக்கின் புகைப்படங்கள் | அசல் | வா.சா.ஆ.20 |
| 02.12.2023 | முதல் தகவல் அறிக்கை | உண்மைநகல் | வா.சா.ஆ.21 |

<u>சாட்சிகள் பட்டியல்</u>

<u>வாதிகள் தரப்பில்</u> <u>பிரதிவாதிகள் தரப்பில்</u>

வா.சா.1. திரு. காளியப்பன் --இல்லை--

,

Sd/-K.Palanivel,
சார்பு நீதிபதி,

மேட்டுப்பாளையம்,